செய்தி வெளியீடு எண்: 407 நாள் : 11.08.2016

<u>செய்தி வெளியீடு</u>

# சென்னை அரசு பொது மருத்துவமனையில் நுண்வழி அறுவை சிகிச்சை துறையில் சிறப்பு பட்ட மேற்படிப்பு தேர்வு

நுண்வழி அறுவை சிகிச்சைத் துறை சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பொது மருத்துவமனையில் செயல்பட்டு வருகிறது. நுண்வழி அறுவை சிகிச்சையின் மூலம் அறுவை சிகிச்சை செய்யப்படும் நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சைக்கு பின் ஏற்படும் வலி மிக குறைவாகவும், மருத்துவமனையில் தங்கும் நாட்கள் குறைவாகவும், ரணம் விரைவில் குணமாகுதல் மற்றும் மிகவிரைவில் வேலைக்கு திரும்ப செல்லுதல் போன்ற பலன்கள் கிடைக்கின்றன.

சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பொது மருத்துவமனையில் உள்ள நுண்வழி அறுவை சிகிச்சைத் துறையில், இவ்வகை சிகிச்சை மூலம் குடல்வால் அறுவை சிகிச்சை, பித்தப்பை கல் அகற்றுதல், குடலிறக்கம் நோய் அறுவை சிகிச்சை (Hernia), ஒட்டு அகற்றுதல், கருப்பை நீர்கட்டி அகற்றுதல், லேப்ராஸ்கோப்பி மூலமாக நோய் கண்டறிதல்களும், வேரிக்கோசீல் மற்றும் திட உறுப்புகள் நீக்குதல் போன்ற அறுவை சிகிச்கைகள் செய்யப்படுகின்றன.

நுண்வழி அறுவை சிகிச்சைத் துறையில் இரண்டு ஆண்டுகள் நடத்தப்படும் சிறப்பு பட்ட மேற்படிப்பு (Post-Doctoral Fellowship) தமிழ்நாட்டில் சென்னை அரசு பொது மருத்துவமனையில் 2014 ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த சிறப்பு பட்ட மேற்படிப்பு தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர்.மருத்துவ பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு பட்ட மேற்படிப்பில் சேர்வதற்கு மாணவர்கள் நுழைவுத் தேர்வு மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவர். 4 மாணவர் சோக்கையோடு 2016 ஆம் ஆண்டு நுழைவுத்தேர்வு பற்றிய விவரங்கள் 14.08.2016 அன்று வெகுவிரைவில் தினநாளிதழ்களில் தெரிவிக்கப்படும் என்றும், நுழைவுத்தேர்வு விண்ணப்பப் படிவம், தேர்வு விவரங்கள் அடங்கிய படிவம் மற்றும் இதர விவரங்கள் இணையதளம் (www.tnhealth.org / www.mmc.tn.gov.in) வழியாக தெரிந்து கொள்ளலாம் என சென்னை மருத்துவக் கல்லூரி இயக்குனர் டாக்டர் ஆர். விமலா அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**